**செய்தி வெளியீடு எண்:464** **நாள் : 20.09.2015**

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பரவுதலை தடுக்க அனைத்து அலுவலர்களை ஒருங்கிணைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

**மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு – அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் வேண்டுகோள்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் அரசு எல்லா காலங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகின்ற காரணத்தினால், எல்லாவிதமான காய்ச்சல் முதலான தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி தமிழக அரசு பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் வயிற்றுப்போக்கிற்கு சிகிச்சை மேற்கொள்ளுதல் போன்ற தொடர் நடவடிக்கைகள் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் டெங்கு, பன்றி காய்ச்சல் போன்ற நோய்கள் இந்தியாவின் மற்ற பகுதிகளில் அதிக அளவில் ஏற்பட்ட போதும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க உடனடியாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பன்முக (Multi dimensional preventive activities) தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த நோய்களின் பாதிப்பு தமிழகத்தில் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த ஆண்டு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டால் அதற்கு உடனடியாக முறையான சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி முதற்கட்டமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் 14.07.2015 அன்று துறை அலுவலர்களுடன் ஆய்வுகூட்டம் நடத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இன்று 20.09.2015, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மரு. சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வு துறை செயலர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்கள் சார்ந்த அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மாவட்ட இணை இயக்குநர் மருத்துவப்பணிகள், மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்கள், கிங் நிலைய இயக்குநர், தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், இந்திய மருத்துவ சங்க மருத்துவர்கள், இந்திய குழந்தைகள்நல சங்க மருத்துவர்கள்,அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் ஆகியோருக்கான கலந்தாய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்பு செயலர் எஸ். செந்தில் குமார், இ.ஆ.ப., மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் மரு. எஸ்.கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. அ. சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறை இயக்குநர் மரு. க. குழந்தைசாமி, ஆகிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் டெங்கு, வைரஸ் காய்ச்சல் மற்றும் பிற தொற்றுநோய்கள் தடுப்பு பற்றிய கட்டுப்படுத்துவது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு கீழ்க்கண்ட செயல் திட்டங்களை மாநிலம் முழுவதும் தீவிரமாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன.

1. கடந்த வருடங்களில் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் நோய் தாக்கம் ஏற்பட்ட பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் தீவிரமாக கொசுப்புழு வளரும் இடங்களை முற்றிலும் அழித்தல், மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற நடவடிக்கைகள் தீவிரப்படுத்த பட வேண்டும்.

2. கொசுப்புழு வளரும் இடங்களான கட்டுமான பணி நடைபெறும் இடங்கள், சரியாக மூடப்படாத கீழ்நிலை மற்றும் மேல்நிலை தொட்டிகள், குளிர்சாதன உபகரணங்கள் போன்ற கொசு உற்பத்தியாக வாய்ப்புள்ள இடங்களில் நீர் தேங்கா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3. தேவையில்லாமல் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், பழைய பாட்டில்கள், டயர்கள், பானைகள், பழைய குளிர்சாதனப்பொட்டிகள், தேங்காய் சிரட்டைகள் போன்றவற்றை கண்டறிந்து அவற்றை முற்றிலும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. அரசு அலுவலகங்கள் மற்றும் பிற அலுவலகங்கள் கல்லூரிகள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள், திரையங்குகள் மற்றும் பொதுமக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் கொசுப்புழு வளராமல் தடுக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

5. ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் பற்றியும், அவ்வாறு கொசுக்கள் உற்பத்தியாவதை தடுப்பது குறித்தும், வீடுகளில் தேவையில்லாத நீர் தேக்கம் பற்றியும் முழுமையான அளவில் பொது மக்களுக்கு தொடர்ச்சியாக சுகாதார விழிப்புணர்வு செய்திகள் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

6. பொது மக்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட வேண்டும். மருத்துவர் பரிந்துரையின்றி மருந்துக்கடைகளில் தாமாக சென்று மருந்து உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

7. காய்ச்சல் பாதித்த பகுதிகளில் உடனடியாக காய்ச்சல் தடுப்பு முகாம்கள் மருத்துவ குழுவினரால் நடத்தப்பட்டு தேவையான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் நடமாடும் மருத்துவக்குழுக்களையும் முழுமையாக ஈடுபடுத்தப்பட வேண்டும்.

8. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஏற்கனவே உள்ள நோய் கண்டறியும் வசதிகள் மற்றும் போதிய அளவு இரத்தம் மற்றும் இரத்த தட்டணுக்கள் மற்றும் நார்மல் சலைன் பாட்டில்கள் போன்றவை போதுமான அளவில் இருப்பில் வைக்க தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

9. அனைத்து மக்களுக்கும் இந்திய மருத்துவ முறை பாரம்பரிய மருந்துகளான நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு மற்றும் மலைவேம்பு இலைச்சாறு போன்றவை அரசு மருத்துவமனைகளில் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

10. அனைத்து தனியார் மருத்துவமனை மற்றும் மருத்துவர்களுக்கு டெங்கு மற்றும் தொற்று நோய்களுக்கான உலக சுகாதார நிறுவன வழிகாட்டுதல் பற்றி அவ்வப்பொழுது எடுத்துரைக்கப்பட வேண்டும்.

11. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தேவையான அளவு படுக்கை வசதிகளுடன் கூடிய காய்ச்சல் மற்றும் தொற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு வார்டுகள் இருப்பதை தொடர்ந்து செம்மையான முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

12. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் கொசு ஒழிப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் பணிகளை முறையாக மேற்பார்வையிட்டு பணிகளை மேம்படுத்த வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் கூடுதலான பணியாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் பணியமர்த்தப்பட வேண்டும்.

13. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தத்தம் பகுதிகளில் கொசு ஒழிப்பு மற்றும் எலிகள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். மேலும் எல்லாப்பகுதிகளிலும் தினமும் குப்பை, கூளங்களை அகற்றி அவற்றை முறையாக அப்புறப்படுத்தி சுற்றுப்புற சுகாதாரம் பேணப்பட வேண்டும்.

14. அனைத்து குடிநீர் மேல்நிலை தொட்டிகள் மற்றும் வீடுகளிலுள்ள மேல்நிலை தொட்டிகள் யாவும் கொசு உட்புகாமல் முழுமையாக மூடிவைக்கப்பட வேண்டும்.

15. அனைத்து கழிவுநீர் தொட்டிகள் கொசு புகாவாதவாறு அதன் மேலுள்ள காற்று குழாய்களில் கொசுவலை கட்டப்பட வேண்டும். இதுகுறித்து அனைத்து குடியிருப்போர் சங்கங்களுக்கும் தேவையான அறிவுரைகள் வழங்கி இப்பணியில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

மேலும், மேற்கண்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக செவ்வனே நடைபெற அவ்வப்பொழுது மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட தொற்றுநோய் தடுப்பு குழுக்கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. இந்த கலந்தாய்வு கூட்டத்தின் போது டெங்கு மற்றும் தொற்றுநோய்கள் தடுப்பு கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**